'பாத்' அமைப்பு சார்பில் வன விலங்குகளை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் இந்தியா முழுவதும் காரில் சுற்றுப்பயணம் செய்கின்றனர்.

மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு வந்த குழுத் தலைவர் முகமது சலீம், உறுப்பினர்கள் ரவி, பைஜூ, சாந்த குமார், பிரசாத் கூறியது:

ரோடுகளை கடந்து செல்லும் வன விலங்குகள் வாகனங்களில் அடிபட்டு உயிரிழப்பது அதிகரித்து வருகிறது. ஒவ்வொருவரும் அவர்கள் சார்ந்த பகுதியில் அடிபட்டு உயிரிழக்கும் மான், யானை, சிறுத்தை, புலி போன்ற விலங்குகளை பற்றி இணையதளத்தில் பதிவு செய்யலாம். இதற்கான இணை யதள பணிகள் தற்போது சோதனை முயற்சியில் உள்ளது.

இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஐவர் குழு, 40 நாட்களில் 20 ஆயிரம் கி.மீ., கார் பயணம் மேற்கொள்ள உள்ளோம். வனவிலங்குகள் காடுகளில் வலம் வந்தாலும் எதிர்பகுதியை கடந்து செல்ல குறிப்பிட்ட பாதையை மட்டுமே பயன் படுத்தும். சாலையை கடந்து செல்லும் பகுதியாக இருந்தால் வேகத்தடை அமைக்க வேண்டும். வால்பாறை புதுத்தோட்டம் ரோட்டின் இருபகுதி மரங்களுக்கு இடையே ஏணி பாதை அமைத்தபின் சிங்கவால் குரங்குகள் விபத்தில் அடிபடுவது குறைந்துவிட்டது. மேலைநாடுகளில் வனவிலங்குகள் அதிகம் இல்லாவிட்டாலும் அவற்றுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகமாக உள்ளன.

இந்தியாவில் விலங்குகள் அதிகம் இருந்தாலும் பாதுகாப்பு நடவடிக்கை குறைவு தான். சாலையை கடப்பதற்கு தொட்டி போன்ற பாலம் அமைக்கலாம்; சுரங்கப்பாதை அமைக்கலாம்; இரவில் போக்குவரத்தை தடை செய்யலாம். வனப்பகுதியை கடந்து செல்லும் லாரி டிரைவர்களிடமும் இதுகுறித்த விழிப்பு ணர்வை ஏற்படுத்துகிறோம், என்றனர்.

# பாம்புகளை கண்டு நடுங்க வேண்டாம்

● விழிப்புணர்வு முகாமில் வேண்டுகோள்

■ மதுரை

பாம்புகளை கண்டு நாம் ஒருபோதும் அச்சமடையத் தேவையில்லை என விழிப்புணர்வு முகாமில் தெரிவிக்கப்பட்டது.

மதுரை அமெரிக்கன் கல்லூரி பசுமைச் சங்கம் சார்பில், பாம்புகள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் முகாமை தொடங்கி வைத்தார். ஊர்வனம் அமைப்பை சேர்ந்த விஷ்வா, சகாதேவன் ஆகியோர் நல்ல பாம்பு, பச்சைப் பாம்பு, கட்டு விரியன் உள்ளிட்ட பாம்புகளை கையாளும் விதம் குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்தனர்.



▲ அமெரிக்கன் கல்லூரியில் நல்ல பாம்பை லாவகமாக பிடித்து மாணவர்களிடம் அச்சத்தை போக்கிய ஊர்வனம் அமைப்பை சேர்ந்தவர்கள். படம்: எஸ். கிருஷ்ணமூர்த்தி

அவர்கள் கூறியது: உலகில் 300 வகையான பாம்புகள் உள்ளன. அதில் நல்லபாம்பு, கண்ணாடி விரியன், கட்டு விரியன், சுருட்டை விரியன் ஆகிய 4 வகை பாம்புகள் மட்டுமே நஞ்சானவை. மண்ணுளி பாம்பு, சாரைப்பாம்பு ஆகியவை விவசாயிகளின் நண்பன். நகரமயமாதல் மற்றும் பாம்புகளின் வாழ்விடங்கள் அழிக்கப்படுதல் போன்ற காரணங்களால் நம் இருப்பிடங்களை தேடி பாம்புகள் வருகின்றன.

பாம்பு வீட்டுக்குள் நுழைந்தால் சத்தமிட்டு அவற்றை விரட்ட வேண்டாம். பாம்புகளும் சாதாரண உயிரினங்கள் தான். பாம்புகள் ஒருபோதும் நம்மை தாக்க நினைப்பதில்லை. நல்ல பாம்பு தன்னை தற்காத்துக் கொள்வதற்காகவே படம் எடுக்கிறது. பச்சை பாம்பும் தற்காப்புக்காகவே வாயை பிளக்கிறது.

பிற பாம்புகளும் தங்களை காப்பாற்றிக் கொள்ளவே சத்தமிடுகின்றன. வீட்டை சுற்றி செங்கல், மண் குவியல், குப்பைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாம்புகள் நம்மை கடித்தால் பதற்றமடையாமல் அசைவின்றி அமைதியாக இருக்க வேண்டும்.

விஷபாம்பு கடித்தால் கடித்த இடத்தில் அதிக வலி, கண்ணில் வியர்த்தல் போன்ற அறிகுறிகள் இருக்கும். உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று முதலுதவி அளிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

வசூலிக்கப்பட்டது.

# பள்ளி, கல்லூரி செய்திகள்

## உலக மண் தின விழா

மதுரை ஒத்தக்கடை தொடக்க பள்ளியில் உலக மண் தின விழா தலைமையாசிரியர் தென்னவன் தலைமையில் நடந்தது. ஆசிரியை ஜெயந்தி முன்னிலை வகித்தார்.

மண்ணின் பயன், மண் வளம் பாதிப்பு, ரசாயன உரங்களால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆசிரியை மெர்சி பேசினார். பாலிதீன் தவிர்ப்பு மற்றும் மண் தின உறுதிமொழி மாணவர்கள் ஏற்றனர். ஆசிரியர் மோசஸ் உட்பட பலர் பங்கேற்றனர். மாணவர் நாகேஸ்வரன் நன்றி கூறினார்.

## மண் அளிக்கும் 95 சதவீதம் உணவு

மதுரை அமெரிக்கன் கல்லூரி சத்திரப்பட்டி வளாகத்தில் கிரீன் கிளப் சார்பில் உலக மண் தின விழா கொண்டாடப்பட்டது. கிளப் தலைவர் இவாஞ்சலின் மனோகரன் வரவேற்றார். முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் துவக்கி வைத்து, "வளி மண்டலம் போல் மூன்று மடங்கு கார்பனை மண் தக்க வைத்துள்ளது.

இதன் மூலம் மாறும் வெப்ப நிலையை மனிதர் எதிர்கொள்ள உதவுகிறது. 95 சதவீதம் உணவை மண் தருகிறது. அதை காப்பது கடமை," என்றார். நிதிக்காப்பாளர் ஹெலன் ரத்தின மோனிகா, கிளப் செயலாளர் ராஜேஷ் பங்கேற்றனர். மண் பாதுகாப்பது குறித்து மாணவர் உறுதி மொழி ஏற்றனர்.

## கிறிஸ்துமஸ் விழா

மதுரை பெருங்குடி அமுதம் மெட்ரிக் பள்ளியில் நிர்வாகி ஜெவீரபாண்டியன் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. முதல்வர்கள் சொர்ணம் பிராங்களின், ஜெயஷீலா முன்னிலை வகித்தனர். கிறிஸ்து பிறப்பு பற்றிய நடனம், பாட்டு உட்பட கலை நிகழ்ச்சிகளை மாணவர்கள் நடத்தினர். பெற்றோர், ஆசிரியர் பங்கேற்றனர்.

செயல்பட்டது. காலை,

# 200 கோடி மக்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

## உலக மண் தின விழாவில் அமெரிக்கன் கல்லூரி முதல்வர் தகவல்

■ மதுரை

உலகத்தில் 200 கோடி மக்கள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளதாக அமெரிக்கன் கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரி சாட்டிலைட் வளாகத்தில் கல்லூரி பசுமை சங்கம் சார்பில் உலக மண் தினம் அனுசரிக்கப்பட்டது. முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர், நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். பசுமைச் சங்க தலைவர் பேராசிரியர் ஜெ.இவாஞ்சலின் மனோகரன் வரவேற்றார்.

இதில் கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் பேசியது:

மண் வளிமண்டலத்தைப் போலவே 3 மடங்கு கார்பனை தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் மூலம் மாறக்கூடிய வெப்பநிலையை எதிர்கொள்வதில் துணைபுரிகிறது. நாம் உண்ணும் உணவில் 95 சதவீதம் மண்ணிலிருந்துதான் பெறப்படுகிறது.

அத்தகைய மண்ணைப் பேணிக் காப்பது நமது கடமை. அதனால், மரக்கன்று நடுவதன் மூலம் மண் அரிப்பை தடுக்க முடியும்.

உலகில் 200 கோடி மக்கள் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாக இருக்கின்றனர். மண்ணை நன்றாக பாதுகாப்பதன் மூலம் இதனை சரி செய்யலாம் என்றார்.

பேராசிரியர் ராஜேஷ் பேசியது: 800 கோடி ஹெக்டேர் இயற்கை மண் அழிந்துவிட்டது. அதற்கு பதிலாக 400 கோடி ஹெக்டேர் பாலைவனத்தை உருவாக்கியுள்ளோம். மண்ணின் வளத்தை பாதுகாப்பதால் உயிரினங்களை அழியாமல் காப்பாற்றலாம். விவசாயம் செழிக்கும். ஒரு கிராம் மண் 9 கிராம் தண்ணீரை பிடித்து வைக்கும். அதனால், நீர் ஆதாரம் பெருகும். மண்ணின் அருமை தெரியாமல் மனிதன் அதனை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறான். இப்போதாவது விழித்துக்கொண்டால் அடுத்த சந்ததியினருக்கு இருக்கிற மண்ணை பாதுகாக்கலாம் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மார்ட்டின் டேவிட், ஹெலன் ரத்ன மோனிகா, ராஜேஷ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் உலக மண் தினத்தை முன்னிட்டு ஆலமரம், கடம்பமரம், வேம்பு மற்றும் தோதகத்தி போன்ற 20 மரக்கன்றுகள் நட்டனர். விழா ஏற்பாடுகளை பசுமைச் சங்க செயலர் ராஜேஷ் செய்திருந்தார்.



▲ அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்ட மாணவர்கள்.

▼ **மண் வளிமண்டலத்தைப் போலவே 3 மடங்கு கார்பனை தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் மூலம் மாறக்கூடிய வெப்பநிலையை எதிர்கொள்வதில் துணைபுரிகிறது.**

# மண்ணானாலும் நாம் பாதுகாப்போம்!

**1982லிருந்து 2007 வரை 14 மில்லியன் ஏக்கர் விளைநிலம் 'நாட்டின் வளர்ச்சி' என்னும் பார்வையில் தொலைந்து போனது. வளமான மண் அதிகளவு நீரினை சேமித்து வைக்கும். ஒரு ஏக்கரில் உள்ள 6 இன்ச் அளவு மண்ணில் உள்ள ஒரு சதவீத கரிம தாதுக்கள், ஒரு லட்சம் லிட்டர் அளவு நீரினை தன்னகத்தே வைத்துக்கொள்ளும் என வல்லுநர்கள் கூறுகிறார்கள்.**




நாம் நமது பூமிக்கு அதிகளவு தீங்கு விளைவித்து விட்டோம். அதை சரி செய்யும் நிலையில் இப்போது உள்ளோம். ஒரு நாடு தனது மண் வளத்தை அழித்து விட்டால், அது அந்த நாட்டினையே அழிப்பதற்கு சமம் என்று சொன்ன அமெரிக்காவின் 32வது அதிபர் பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் கூற்று இப்பொழுது உண்மையாகிறது. புயல் மற்றும் வெள்ளத்திற்கு காரணமான மண் அரிப்பு தடுக்கப்படவேண்டும் என அவர் தன் நாட்டின் அனைத்து கவர்னர்களுக்கும் 1937 பிப்., 26ம் நாள் கடிதம் எழுதினார்.

## மண்ணே ஊட்டச்சத்து

95 சதவீத உணவானது நேரடியாகவே அல்லது மறைமுகமாகவோ மண்ணிலிருந்து தான் கிடைக்கிறது. நாம் சாப்பிடக்கூடிய உணவின் ஊட்டச்சத்து மதிப்பு, மண்ணின் வளத்தை பொறுத்துதான் தீர்மானிக்கப்படுகிறது. மண் மாதிரியில் சராசரியாக 45 சதவீதம் தாது உப்புகளும், 25 சதவீதம் நீர், 25 சதவீதம் காற்று மற்றும் 5 சதவீதம் கரிமப் பொருட்களும் உள்ளன. மண்ணில் உள்ள ஒவ்வொரு கிராம் கரிமக் கார்பனானது, 8 கிராம் நீரினை தன்னகத்தே தேக்கி வைக்கும் திறன் உள்ளது. உலகினுடைய 10 சதவீத கார்பன் வெளியேற்றத்தை மண் தன்னிடையே தக்க வைத்துள்ளது.

மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் மற்றும் பிற உயிரிகளின் கூட்டு முயற்சியினால் மண் வளப்படுத்தப்படுகிறது.

உயிரிகளினால் நீர் மண்ணில் செல்வதற்கும், தாது மற்றும் ஊட்டச்சத்து சுழற்சிக்கும் பயன்படுகிறது. பூஞ்சை, பாக்டீரியா மற்றும் மண்புழுக்கள் மண்ணில் உள்ள கரிமப் பொருட்களை வேதிமாற்றத்தினால் ஊட்டச்சத்து பொருட்களாக மறுசுழற்சி செய்து மண்ணிற்கு கொண்டுவருகிறது.

## பருப்பே மண்வள ஆதாரம்

உலக மண் தினம் கொண்டாடப்படும் இந்நாளில், இந்த ஆண்டு, மண் மற்றும் பருப்பு வகைகள் கூட்டால் மண் அரிப்பை தடுக்கலாம் என்ற கருப்பொருளை கொண்டுள்ளது. ஆதலால் பருப்பு வகைகளை பயிரிடுவதன் மூலம், மண்ணின் வளத்தை நாம் திரும்பப் பெறலாம் எனவும் மண் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

ஏனெனில் பருப்பு வகைகள், உலர் விதைகள், உலர்ந்த பீன்ஸ் பருப்பு மற்றும் பட்டாணி பெரும்பாலும் அறியப்படும் மற்றும் பயன்படுத்தும் பருப்பு வகைகள் ஆகும்.

இந்த பருப்பு வகைகள், அதிக சத்துக்கள் நிரம்பிய மற்றும் ஒரு உயர் புரதம் அடங்கிய அத்தியாவசிய பயிர்கள். இறைச்சி மற்றும் பால் உணவை உண்ணாத பிரதேசங்களில், மனிதனுக்கு தேவையான புரதத்தினை கொடுக்கக்கூடியது. பருப்பு வகைகளில் கொழுப்பு குறைந்த மற்றும் கரையக்கூடிய நார்ச்சத்து உள்ளதால், கொழுப்பு மற்றும் ரத்த சர்க்கரை அளவினை கட்டுப்படுத்தும். இந்த குணங்களினால்தான் நீரிழிவு மற்றும் இருதய மேலாண்மைக்கு இந்த பருப்பு வகைகள் உலக சுகாதார நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படுகிறது. பயறு வகைகள் உடல் பருமனை குறைக்கும் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**என் பார்வை**
**திங்கள் – வெள்ளி**

## நிலம் வளமாகும்

விவசாயிகளுக்கும் பருப்பு வகைகள் ஒரு முக்கியமான பயறு வகையாகும். ஏனெனில் அவைகளை விற்பதற்கும், பயன்படுத்துவதற்கும் ஏற்றது. விவசாயிகளுக்கு உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குகிறது. பருப்பு வகைகள் இழைச்சத்து பண்புகளை, மண்ணில் நிலைநிறுத்தி, விவசாய நிலத்தை வளப்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிக்க செய்கிறது.

இதனை ஊடுபயிராக பயன்படுத்துவதால், விவசாயிகள் விவசாய பல்லுயிர் மற்றும் மண் பல்லுயிர்களை ஊக்குவிக்க முடியும். பூச்சிகள் மற்றும் நோய்களை தடுக்க முடியும்.

பருப்பு வகைகள் காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதிலும், செயற்கையான உரங்களை நம்பியிருக்க வேண்டிய நிலையை குறைப்பதிலும் மிகப் பெரிய பங்காற்றுகிறது. இந்த செயற்கை உரங்கள் உற்பத்தி சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும். எனினும் பருப்பு வகைகள் இயற்கையாக மண்ணில் வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்துகிறது மற்றும் மண்ணில் உள்ள பாஸ்பரஸ் சத்தினை விடுவித்து செயற்கை உரப்பயன்பாட்டினை குறைக்கிறது.

## உணவு, வெப்ப அச்சுறுத்தல்

மண் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை உணவு உற்பத்திக்கும், வெப்பநிலை மாற்றத்திற்கும் முக்கிய அச்சுறுத்தலாக உள்ளன. உணவு மற்றும் விவசாய அமைப்பு கூற்றின்படி, பூமியின் மண் கிட்டத்தட்ட 33 சதவீதம் குறைந்துள்ளது எனத் தெரிவிக்கிறது.



40 சதவீதம் மண் சிதைந்த பகுதியானது, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பிரதேசங்கள் ஆகும். அதே நேரத்தில் நமது பூமியின் மக்கட்தொகையானது இப்போதுள்ள 7 பில்லியன்களிலிருந்து, 9 பில்லியன்களாக 2050ல் உயரும் போது 70 சதவீதம் உணவு உற்பத்தி தேவைப்படுகிறது. இதற்கான தீர்வாக மக்களின் பிரதான உணவாகவும், குறிப்பிடத்தக்க சத்து நிறைந்ததாகவும் பயறு வகைகள் உள்ளன. பல்வேறு வழிகளில் மண்ணின் வளத்தினை மேம்படுத்தி, மண் உயிர்மத்தினையும், மண் அமைப்பினையும் மண்ணில் வாழும் பல்லுயிர்களையும் பாதுகாக்கிறது.

வளமான மண் மற்றும் பயறு வகைகள் மூலம் மட்டும்தான் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 2030 குறிக்கோளான, உணவு பாதுகாப்பு மற்றும் சத்தான உணவு கொடுப்பதை செயல்படுத்தமுடியும்.

காலம் சென்ற தாய்லாந்து அரசர் பூமிபோல் அடல்தேஜ், என்ற மண் விஞ்ஞானியின் நினைவாக தான் அவரது பிறந்த தினம் உலக மண் தினமாக அனுசரிக்கப்படுகிறது. ஏனெனில் அவர் நிலையான மண் மேலாண்மைக்காக போராடினார். இந்த உலக மண் நாள், சர்வதேச அளவில், மனித வாழ்க்கைக்கு முக்கியப் பங்காற்றும் முகமாக, மண்ணினை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

*'வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயர குடி உயரும்*
*குடி உயர கோல் உயரும்*
*கோல் உயர கோன் உயர்வான்'*

என்ற அவ்வையார் கூற்றுப்படி, 'விவசாய நிலத்திற்கு தேவையான மண்ணை பாதுகாக்க, இந்நாளில் உறுதியேற்போம்.

**– பேராசிரியர் எம். ராஜேஷ்**
**மதுரை. 94433 94233**

# On a mission to bring back the house sparrows

CONTINUED FROM PAGE 1



## SPARROWS ARE INTEGRAL TO THE ECOSYSTEM



On every World Sparrow Day, we reach out to the public to spread awareness about the bird. We started this as a practice in 2012 and for the last eight years, we have been distributing around 500 boxes every year. But only 10 per cent of the boxes are in good condition as people tend to buy these boxes out of excitement, but fail to provide a conducive environment for the birds to live. We provide three types of artificial nests — mud pots, shoe boxes, and wooden boxes. People still don't know the importance of the bird in the ecosystem. The change in the building structures is one of the primary reasons for the dwindling of sparrows. People are increasingly putting up nets to escape from mosquitoes. This prevents the entry of sparrows into the houses.

- M RAJESH, PROFESSOR, sparrow lover, Madurai

## LACK OF NESTING SPACE, A MAJOR CONCERN



Along with Dr Priyatharshini Rajendran from Lady Doak College and K Renuka Devi, I have been doing research on house sparrows. We have visited 13 blocks in Madurai and had found 2,571 sparrows in the preliminary survey. We chose 168 villages out of the 420 villages in Madurai last year for our research and were shocked to find that only 109 villages had sparrows. The primary reasons behind the decline are the decrease in the nesting space and change in the building structure. Today, most of the buildings are air-conditioned and do have not have ledges or vents for sparrows to come and sit. Food availability, too, has become a major concern as the pesticide used in the farms, kills the worms and insects, which are the primary food for sparrows. Sparrows are omnivores but feed the young ones with different kinds of food based on their age.

- P MERLYNNA ESTER, sparrow researcher, Madurai

# உலக சிட்டுக்குருவிகள் தினம்



உலக சிட்டுக்குருவி தினத்தை முன்னிட்டு மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் அழிந்து வரும் சிட்டுக்குருவி இனத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்கை கூண்டுகளை பொதுமக்களுக்கு பரிசாக வழங்கினர்.

தினகரன் Thu, 21 March 2019
https://epaper.dinakaran.com/c/37791783

# ‘மேற்கு தொடர்ச்சி மலையை பாதுகாப்பது அவசியம்’

**மதுரை, அக். 18 –** மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுகலை விலங்கியல் மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் ‘மேற்கு தொடர்ச்சி மலையின் அச்சுறுத்தலும் பாதுகாப்பும்’ என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

துறை தலைவர் ஜோசப் ததேயுஸ் வரவேற்றார். முதல்வர் தவமணி கிறிஸ்போடர் தலைமை வகித்தார்.

மாவட்ட வன அலுவலர் சமர்தா துவக்கி வைத்து பேசியதாவது: மேற்கு தொடர்ச்சி மலையை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு இளைஞர்களிடம் ஏற்பட வேண்டும். இயற்கையால் உள்ள ஆபத்துகளை விட மனிதர்களால் ஏற்படும் ஆபத்துக்கள் இம்மலைக்கு அதிகம். இதனால் தான் தண்ணீரும், உணவும் கிடைக்கிறது என்றார்.



■ காளிதாசன்

ஓசை அமைப்பின் நிறுவனர் காளிதாசன் பேசியதாவது: இப்பிரபஞ்சத்தில் பூமி மட்டுமே வாழத் தகுதியானது. அதிலும் பல்லுயிர் சூழல் வளம் மிக்க 18 இடங்களில் ஒன்றாக மேற்கு தொடர்ச்சி மலை உள்ளது. இந்த மலையில் இருந்து தான் தென் மாநிலங்களுக்கான அனைத்து முக்கிய நதிகளும் உற்பத்தியாகின்றன. அரியவகை உயிரினங்கள், தாவரங்கள் உள்ளன. வனப்பகுதி அழிக்கப்படுவதால் பல இனங்கள் அழிந்து விட்டன. மிச்சம் இருக்கும் அனைத்து உயிரினங்களையும் அடுத்த தலைமுறைக்கு விட்டு வைக்க வேண்டும் என்றார். பேராசிரியர் ராமகிருஷ்ணன் பேசினார். இளங்கலை துறை தலைவர் ஜாய் ஷர்மிளா நன்றி கூறினார்.

# 'Conservation of Western Ghats should be discussed in classrooms as subjects'

TIMES NEWS NETWORK

**Madurai:** Conservation of western ghats is a subject that has to be discussed in classrooms though it is not part of the curriculum, conservationalist, K Kalidasan of OSAI NGO said during a national conferen-

## RAISING AWARENESS THROUGH EDUCATING

e on 'Western Ghats - threts and conservation' held t the American College, fadurai on Wednesday.

The speaker drove home is point at the outset of the onference itself. In a sli-eshow of animals and birds, the audience gathered were able to identify animals such as Panda, Giraffe, Zebra which are not indigenous species, but not the likes of Emerald Dove-the official bird of Tamil Nadu or the mouse deer, which are endemic to the Western Ghats.



**It is because these are not taught in our curriculum. Awareness about our environment is unfortunately less in our present curriculum**

**K KALIDASAN**
Speaker From OSAI, an NGO

"It is because these are not taught in our curriculum. Awareness about our environment is unfortunately less in our curriculum," Kalidasan said added that there is a necessity to know our wildlife.

"The pride of India is its bio-diversity," Kalidasan said and went on to share a story about his native place, Coimbatore.

Citing a 1927 Madras Presidency report, Kalidasan said that Coimbatore was declared as the worst place to live in the whole presidency.

Over the years, the image has changed and now Coimbatore is seen as a place to settle in, Kalidasan said. What has changed in between these years? Water from Siruvani, he says. Two years after the report in Madras Presidency, Coimbatore started to receive water from the Siruvani river.

Unlike the Himlayan rivers which originate due to melting of glaciers, rivers from Western Ghats originate from the shola forests that are endemic to the region and we have to take steps to conserve them, he said.

Blaming the British for tweaking the ecosystem by introducing invasive species such as eucalyptus and wattle in shola forests along the western ghats, Kalidasan said that it is high time that we should not repeat the same mistake.

Earlier, district forest officer JR Samartha inaugurated the conference. "The main threat to the environment is the unfavourable human intervention and at times natural disaster," he said requesting the students gathered to take a pledge to save nature for the future generations.

# 'Curriculums fail to educate children on local flora, fauna'

## Conference on conserving the western ghats held

STAFF REPORTER
MADURAI

Curriculums followed in a majority of educational institutions in India failed to educate children on local flora and fauna, the knowledge of which was important for conservation efforts, said K. Kalidasan, president of non-governmental organisation Osai that works for environmental protection.

Speaking at a conference on 'Western ghats - threats and conservation' at The American College here on Wednesday, he highlighted that students who easily recognised animals such as giraffe, zebra and panda that had no habitats in India often failed to recognise even birds like common koel and emerald dove, the State bird of Tamil Nadu.

"Our textbooks rarely showed pictures of these local flora and fauna. While it is important to know about panda that is facing the risk of extinction, it is even more important to know what is around us," he added.




**Conserving western ghats:** Samartha, District Forest Officer, addressing a conference at The American College in Madurai on Wednesday. • S. JAMES

He said the western ghats, which was one of the 18 biodiversity hotspots in the world, was the source of almost all the rivers flowing in south India and its conservation was imperative to ensure water security for future generations.

Reckless constructions and other intrusions into the forest in the name of development, tourism that was insensitive to the environment and presence of invasive species of trees were the key issues that had to be addressed for the protection of the western ghats, he added.

J.R. Samartha, District Forest Officer, Madurai Forest Division, who delivered the inaugural address at the conference, said a majority of the environment-related issues were man-made. He stressed the need for younger generation to take a lead in the conservation of forests and educate others in this regard.

M. Davamani Christober, Principal and Secretary of the college, also spoke.

Plea con hu STAFF MADUR A pet Madu dras perm day-l Madu Gove to th conv hi as Ju test pol sid ce hu n o t

ஊர்வலமாக சென்றனர்.

# உலக சுற்றுச்சூழல் தின விழா கொண்டாட்டம்

மதுரை

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் மதுரையில் நேற்று உலகச் சுற்றுச்சூழல் தின விழா கொண்டாடப்பட்டது.

ஆரப்பாளையம் ரவுண்டானா அருகில், 'குப்பையை எரிக்காதீர்கள், காற்று மாசுபடுவதை எதிர்ப்போம்', என்று முகத்தில் கைக்குட்டை கட்டி, மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. அமெரிக்கன் கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் மரக்கன்றுகள் வழங்கி பசுமையை நடையைத் தொடங்கி வைத்தார். மாவட்டத் தலைவர் ராஜேஷ், செயலாளர்கள் வெண்ணிலா, மலர் செல்வி, பொருளாளர் ஹரிபாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தெப்பக்குளம் தியாகராசர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் உலகச் சுற்றுச்சூழல் நாள் விழா கொண்டாடப்பட்டது. தாவரவி யல் துறை உதவிப் பேராசிரியை அருணா ராமச்சந்திரன் தலைமையில் நாட்டுநலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் ஊர்வலமாக சென்றனர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரங்கள் வளர்ப்புப் பற்றி பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# Sharing space with the birds

College campuses in the city serve as little sanctuaries for a wide variety of birds and biodiversity

A. SHRIKUMAR









CAMPUS VISITORS *(Clockwise from Top Right): Rose Ringed Parakeets, Spotted Owlet, Rosy Starlings and Peahen* PHOTOS: SPECIAL ARRANGEMENT

"We saw a pair of peahens and five peafowls in our college recently," says Kumaresan Chandrabose, a student of BSc., Microbiology, The American College. "This is the first time, the national bird has inhabited in our campus." "The peafowls are healthy and we hope the population will increase. They must have come from the neighbouring Medical College or the Rajaji Park," says M. Rajesh, Professor of Zoology. The college is home to over 20 species of small and medium sized birds, thousands of varieties of plant and trees and a number of butterflies, insects and reptiles.

Amidst the concrete jungle the city has become, college campuses with a rich variety of trees and plants are the green oases that nurture birdlife and biodiversity. Members of the Madurai Nature Forum roped in volunteers, students and professors from half-a-dozen city colleges to do a rough count of birds during the Great Backyard Bird Count, last February. "The month-long initiative created an opportunity for academicians to learn and appreciate the biodiversity present in our immediate surroundings," says A.S. Pricilla, the head of Zoology Department, Lady Doak College, where over 18 species of birds were recorded. "We have made bird watching regular now and our students maintain a log book on the count."

"The presence of birds indicates that the environment is healthy. Tree cover is a prerequisite for attracting winged visitors. At places like LDC and American College, which are located in the very heart of the city, we were amazed to find so many birds," says Praveen Kumar, a student who took part in the count. "For instance, if Spotted Owlets are found in a place, it implies the presence of old trees. The nocturnal raptor bird nests only in natural cavern found in the tree trunks." The members were surprised to see a good number of Barn owls at Lady Doak College and the Forest Wagtail at The American College. "Instead of just showing the petrified specimens of animals and birds in life science classes, students enjoyed seeing real birds," says S. Govindan, Professor of Zoology, Yadava Men's College, where Pond Heron were sighted in huge numbers. "As the campus is surrounded by irrigation tanks, we get many water birds." "Paradise Flycatcher was another highlight of the Yadava College campus, as it is a migratory bird that visits Madurai only for a couple of months," says Kumaresan.

> The presence of birds indicates that the environment is healthy. Tree cover is a prerequisite for attracting winged visitors. ”

A dozen varieties of birds were recorded in Meenakshi College, Fatima Colleg and Mannar Thirumalai Naicker College in Pasumalai. Flocks of Rosy Starling, a grain-feeding bird, called as 'SolaKuruvi' in Tamil was found at Mannar College much to the amusement of birders. "No other college in the city has these birds in the campus. Since Pasumalai is flanked by the Tiruparankundram tank and paddy fields on either side, it is a favourable pocket for the Rosy Starling," says Kumaresan. The Nature Forum members plan to carry forward the project to more colleges in the entire district.

# Number of dead animals on roads in forest areas is only 10% of fatalities

TIMES NEWS NETWORK

**Madurai:** Spotting a lone wild animal lying dead run over by some unknown vehicle on roadside may not strike an emotional note for many travellers. But animals found dead on a pleasant morning ride through forest area is just a tip of an iceberg since not all run over during night lie there for long. In a forest ambience, the scavenging animals quickly devour the leftover pieces of the dead animals and the fate of animals injured in road hits but manage to slip into forest remain unknown, according to environmental group Environment Conservation Group.

The group has undertaken a pan-India drive called 'Provide Animals safe Transit on Highways' (PATH) starting from Coimbatore four days ago. On Thursday, they stopped into the American College, Madurai to conduct an awareness session for zoology students about road kills on highways criss-crossing the forest areas.

Interacting with media persons on the sidelines of the meeting, the team lead Mohammed R Saleem said that they have undertaken the journey to sensitise and document road kills of wild animals on highways. "The wild animals found dead on road are just 10% of road kills because scavenging animals and nocturnal carnivorous birds will clear the carcass shortly or the ones managing to flee with injury may die in forest somewhere," he said. Starting from endangered animals like leopards, elephants and tigers, thousands of wild animals like monkeys, deer, snakes, tortoises and frogs die after being run over by speeding vehicles while crossing the roads. Addressing the students, Saleem asked them to contribute the details of any road kills they come across on their website **www.ecgwild.org**. At present, there is no proper database on road kills and the existing ones are confined to particular areas. "We are planning to create this website to document all road kills happening across the country. We are making the website more interactive to users and working on those features," he said.

## DISTURBED ABODE



- Among the road kills, hardly 10 – 20% are known ones with carcasses lying along the roadside
- Bonnet macaque (common monkey) are killed in majority since they get used to scavenging for scraps left over by travellers along the highways
- Due to the heat-seeking nature of cold-blooded animals, many reptiles especially snakes are lured to the warmth of the roads in night and are runover
- With vehicles becoming more swifter and noiseless, even birds are turning causalities, and coucal is one of the major species hit by vehicles

# வாகன விபத்துகளால் அதிகம் இறக்கும் குரங்குகள்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் வேதனை

■ மதுரை

வாகன விபத்துகளால் குரங்குகள் அதிகளவில் இறப்பதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் வேதனை தெரிவித்தனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு சார்பில், சாலை விபத்துகளில் இறக்கும் வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கோவையில் கடந்த 8-ம் தேதி தொடங்கியது. இந்த குழு தமிழகம், கேரளம், புதுச்சேரி, ஆந்திரம், ஒரிசா, மேற்கு வங்கம், டெல்லி உள்ளிட்ட 22 மாநிலங்களில் சுமார் 20 ஆயிரம் கி.மீ. பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதன்படி இந்தக் குழு நேற்று மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு வந்தது.



▲ மதுரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கையேடுகளைக் காண்பிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் மற்றும் அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி.

பின்னர் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முகமது ஆர்.சலீம் கூறியது: வனவிலங்குகளை நாம் பிச்சைக்காரர்களாக மாற்றிவிட்டோம். இதனால் நாம் கொடுக்கும் பொருட்களை உண்பதற்காக நிறைய வனவிலங்குகள் சாலைக்கு வருகின்றன. இதன் காரணமாகத்தான் நிறைய இறப்பு நிகழ்கிறது. விலங்குகளில் குரங்குகளும், ஊர்வனவற்றில் பாம்புகளும், பறவை இனத்தில் செம்போத்தும்தான் வாகன விபத்துக்களால் அதிக அளவில் இறக்கின்றன. வேகமாகச் செல்லும் வாகனங்கள், அறிவிப்பு பலகைகளை கவனிக்காமல் செல்வது போன்றவையும் வனவிலங்கு இறப்புக்கு முக்கிய கார ணமாகும்.

யானை, புலி போன்ற பெரிய வனவிலங்குகளை தவிர சிறிய வனவிலங்குகள் இறந்து கிடந்தாலும் நாம் அவற்றை ஒரு பொருட்டாகவே நாம் எடுத்துக்கொள்வதில்லை. இதனால் வனவிலங்குகள் இறப்பு குறித்து நம்மிடம் போதிய விவரம் இல்லை. பெரும்பாலான உயிரினங்கள் இரவு நேரங்களில் இறப்பதால் காலையில் அவை இறந்த நிகழ்வுகள் கூட நமக்கு தெரிவதில்லை. எனவே வனவிலங்குகள் இறந்துகிடந்தால் அவை குறித்த விவரங்களை பதிவு செய்வதற்காக புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. நம் கண்ணில் இறந்த விலங்குகள் தெரிந்தால் அதை உடனடியாக அந்த இணையதளத்தில் பதியலாம். இந்த இணையதளத்தை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்றார்.

# Students sensitised to save animals

Madurai: The members of Provide Animals Safe Transit on Highways (PATH), Coimbatore sensitised students towards saving the animals injured on the highways, at the American College here on Thursday. As part of their tour from Kanyakumari to Kashmir in 40 days, the team members of PATH visited the college. Saleem, PATH president, blamed the killing of animals due to speeding ignorance of animals straying on to the highways. The Green club of the college organised the function.

grams each to Kumbakonam for the Mahamaham

ham2016.in or through post.

am and 5 pm on Friday

enacted for LDC students

# Five On a Road Trip to Prevent Animal Roadkills

**Express News Service**

**Madurai:** With the support of Tamil Nadu Forest Department officials, five members of a Coimbatore-based NGO have begun an all-India road trip to spread awareness about preventing awareness on animal roadkills in the country.

R Mohammed Saleem, president of the Coimbatore based NGO Environment Conservation Group (ECG), said that they would cover nearly 20,000 km across the country in a car to create awareness about their initiative - Provide Animals safe Transit on Highways (PATH) with the support of the Tamil Nadu Forest Department. Members of ECG are also creating awareness about their initiative PATH in colleges so as to spread awareness about preventing animal roadkills in the country. Members of ECG visited The American College in Madurai on Thursday.

Commenting on the initiative, Mohammed Saleem said, "As a part of this initiative, we will cover various routes across forest areas and sanctuaries in order to collect details about the types of animals that are being killed in road accidents in that area. We will collect details of animals starting from frogs to elephants during this trip. After collecting the details, we will prepare a report about the animal roadkills based on which we will come up with ideas and discuss it with the Forest Department to prevent animals being killed in accidents."

He added that they started their trip from Coimbatore recently and have organised several awareness programmes about animal roadkills for college students and also for truck drivers at Ooty.

In order to prevent animal road-kills, the Forest officials at Valparai have set up tree top bridges at nearly five locations to prevent lion-tailed macaques from being killed in road accidents.

It is an effective method to save the animal as this species of monkey is seen only in India, pointed out Saleem.

Though several animals, snakes and birds are killed in road accidents these days, only a few incidents come to light, he said. He added that such incidents can be prevented by setting up sign boards in the areas where animals are spotted frequently. Such kinds of mitigation methods would be given to the Forest officials after collecting the data during the trip. In addition to this, people could also contribute information about the incidents of animal roadkills in their area through a website www.ecgwild.org/path that was created by ECG, he further added.



Members of Environment Conservation Group with college students in Madurai | K K SUNDAR

...அவர் தெரிவித்தார்.

## செங்கல்பட்டுக்கு சிறப்பு ரயில்

■ மதுரை

ரயில்வே நிர்வாகம் வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வரும் 22, 29, 2017 ஜன.5, 12, 19, 26 ஆகிய தேதிகளிலும், பிப். 2, 9-ம் தேதிகளிலும் மாலை 4.30 மணிக்கு நெல் லையில் இருந்து சிறப்பு ரயில்கள் புறப்படும். இந்த ரயில்கள் மறுநாள் அதிகாலை 4.30 மணிக்கு செங்கல்பட்டு சென்றடையும்.

...தொடர்பான புகார் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க வசதியாக 28 இடங்களில் புகார் பெட்டிகளை நேற்று வைத்தார். மணி நகரம் இஸ்கான் கோயில் அருகே புகார் பெட்டி திட்டத்தை தியாகராஜன் எம்.எல்.ஏ. நேற்று தொடங்கி வைத்தார். அப்போது மதுரை மாநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு உட்பட பலர் உடன் இருந்தனர். இத்திட்டம் குறித்து தியாகராஜன் கூறியது: எம்எல்ஏ அலுவலகம், எனது வீடு

நகரம் இஸ்கான் கோயில் அருகே புகார் பெட்டி வைத்தார் தியாகராஜன் எம்.எல்.ஏ. படம்:எஸ்.கிருஷ்ணமூர்த்தி

என 2 இடங்களில் அலுவலகம் செயல்படுகிறது. இங்கு நேரடியாகவும், வாட்ஸ் அப், இ-மெயில், கால் சென்டர் மூலம் தங்கள் குறைகளை தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த வசதியை ஏழை மக்கள் பயன்படுத்த முடியவில்லை என்பது தெரிந்தது.

இதனால் புகார் பெட்டி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 22 வார்டுகளில் 28 இடங்களில் இந்த பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெட்டிக்கும் ஒரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். பெட்டியில் போட பயன்படுத்த வேண்டிய படிவங்களும் வழங்கப்படும். வாரம்தோறும் புதன், சனிக் கிழமைகளில் பெட்டிகள் திறக்கப்படும்.

புகார் மற்றும் ஆலோசனைகள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டு தீர்வு காணப்படும் என்றார்.

...மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மக்களிடம் இருந்தே கருத்துகள் பெற்று பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. என்னை எந்த நேரத்திலும் எளிதில் தொடர்பு கொள்ளலாம்.

எனது செயல்பாட்டில் குறைகள் இருந்தால், அதையும் பதிவு செய்து புகார் பெட்டியில் போடலாம் என்றார்.

...படித்துரை மகன் ஹரீஸ் (5). செக்கானூரணியிலுள்ள தனியார் பள்ளியில் யூகேஜி படித்தான். நேற்று முன்தினம் பள்ளியிலிருந்துவீட்டுக்கு வேனில் திரும்பியபோது, செக்கானூரணி - திருமங்கலம் ரோட்டில் 'பவர் கிரிட்' என்ற இடத்தில் வேன் கதவு திடீரென திறந்தது. கதவு அருகே நின்றுகொண்டிருந்த ஹரிஸ் சாலையில் விழுந்தான். அப்போது, வேனின் பின் சக்கரம் ஏறி சம்பவ இடத்திலேயே...

# வைகை நதியை தூய்மைப்படுத்திய கல்லூரி மாணவ, மாணவியர்

■ மதுரை

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவ-மாணவியர், பொதுமக்கள் சுமார் 50-க்கும் மேற்பட்டோர் வைகை நதியை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

ஆல்பர்ட் விக்டர் மேம்பாலம் மற்றும் கல்பாலத்திற்கு இடையே உள்ள ஆற்றுப் பகுதியில் கிடந்த பிளாஸ்டிக், பழைய துணிகள், குப்பைகளை நேற்று அகற்றினர். பல்கலைக்கழக பதிவாளர் பெ.விஜயன் தலைமை வகித்தார். அமெரிக்கன் கல்லூரி முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் களப் பணியைத் தொடங்கி வை த்தார்.

> ▼ **நீர்நிலைகள் மீதான மக்களின் பொறுப்புணர்வை ஊக்குவிக்கவே இதுபோன்ற பணிகள் நடைபெறுகின்றன**

இது குறித்து ஒருங்கிணைப்பாளரான மதுரை காமராஜர் பல்கலைக்கழக தொடர்பியல் துறை தலைவர் சு.நாகரத்தினம் கூறியதாவது: சுற்றுச்சூழல் குறித்து மாணவர்களுக்கு பயிலரங்கம் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான இந்த தூய்மை பணியில் மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். போதிய விழிப்புணர்வு இல்லாததால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வைகை பல்வேறு சூழல்கேடுகள் ஏற்பட்டு பொலிவிழந்து விட்டது.

நீர்நிலைகள் மீதான மக்களின் பொறுப்புணர்வை ஊக்குவிக்கவே இதுபோன்ற பணிகள் நடை பெறுகின்றன. மதுரை மற்றும் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளையும் மாணவ-மாணவியர் சுத்தம் செய்துள்ளனர் என்றார்.




▲ மதுரை வைகை ஆற்றில் பிளாஸ்டிக், பழைய துணிகள், குப்பைகளை அகற்றும் மாணவ, மாணவியர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

## பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ மதுரை

பிஎஸ்என்எல் நிறுவனத்தில் நாடு முழுவதும் உள்ள 65 ஆயிரம் மொபைல் போன் டவர்களை பராமரிக்க துணை நிறுவனம் அமைக்க முயற்சி செய்யும் மத்திய அரசை கண்டித்து பிஎஸ்என்எல் ஊழியர்கள், அதிகாரிகள் நாடு முழுவதும் நேற்று ஒரு நாள் கண்டன வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மதுரை தல்லாகுளத்தில் உள்ள பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகே நடைபெற்ற...

## வியர்க்குதே

**அரசரடி**

மதுரை அரசரடி உப மின் நிலையத்தில் டிச. 17-ம் தேதி பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் கீழ்க்கண்ட பகுதிகளில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் நிறுத்தப்படும் என செயற்பொறியாளர் பி.குமார் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் நிறுத்தப்படும் இடங்கள்: சம்மட்டிபுரம் மெயின் ரோடு, முத்துராமலிங்க தேவர் தெரு, ஸ்ரீராம்நகர், எச்எம்எஸ் காலனி, டோக்நகர் 1-16 தெருக்கள், தேனி மெயின் ரோடு, விராட்டிபத்து சில பகுதி, பல்லவன்நகர், முடக்குச்சாலை, வ.உ.சி. மெயின் ரோடு, ஈ.பி.காலனி, நடராஜ்நகர், அசோக்நகர், கோச்சடை, விளாங்குடி, ஜெயில் ரோடு, மேலப்பொன்னகரம் 2, 3, 10 தெருக்கள், கனரா வங்கி முதல் டாக்சி நிலையம் வரை, ஆர்.வி.நகர், ஞானஒளிவுபுரம், விசுவாசபுரி 1-5 தெருக்கள், ஆரப்பாளையம் பஸ் நிலையம், எஸ்.எஸ்.காலனி, கம்பர் தெரு, பொன்மேனி, பைபாஸ்ரோடு, பெத்தானியாபுரம், மீனாட்சி பஜார், டெம்சி காலனி, பாத்திமா கல்லூரி, இந்திரா நகர், குட்ஷெட் ரோடு, தெற்கு மண்டல அலுவலகப் பகுதி.

**அவனியாபுரம்**

மதுரை அவனியாபுரம் துணை மின் நிலையத்தில் டிச. 17-ம் தேதி மாதாந்திர...

மாபெரும் தலைவருக்கு புகழ்



# Over 700 students form human chain to create awareness on climate change

TIMES NEWS NETWORK

**Madurai:** More than 700 students formed a human chain to create awareness about global warming and climate change at the American College in Madurai on Friday.

The event was organized by the NSS and Green Club of the American College, Tamil Nadu Science forum, to create awareness ahead of the UN climate summit to be held in New York. They called for an end to the age of fossil fuels and climate justice for everyone. The human chain was formed from Tamukkam grounds to Goripalayam with the participants holding placards on the importance of saving the Earth by tackling climate change for which carbon emission should be prevented.

Students also formed the symbol of O3 in the college premises. Principal of American College, Dr M Davamani Christober inaugurated the human chain. They took the pledge to avoid carbon emission through recycle and reuse. Convener of the Green Club, M Rajesh spoke on global warming and climate change.

He explained that climate change encompasses not only rising average temperatures but also extreme weather conditions, shifting wildlife populations and habitats, fising sea levels and a range of other impacts. He also briefed that India's projected carbon emission of 2.6 billion tonnes in 2018 would account for 7% of the global carbon-di-oxide levels and stood as fourth highest emitter of carbon in the world. This can be reduced by using the electricity and automobiles efficiently, he said

K. Antony Xavier



The students form ed a human chain during the awareness program organised on 'Global Warming and Climate Change' by NSS and Green Club of American College

## உலக வெப்பமயமாதல்

# கல்லூரிகளில் விழிப்புணர்வு பேரணி, மனிதச் சங்கிலி

**மதுரை, செப். 20:** உலக வெப்பமயமாதல் மற்றும் பருவ நிலை மாறுபாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரிகளில் பேரணி, மனிதச் சங்கிலி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில், பல்கலையின் கீழ் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அமெரிக்கன் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடந்த நிகழ்வில், மாணவ, மாணவியர் 700 பேர் மனிதச் சங்கிலி அமைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தமுக்கம் தியாகிகள் நினைவுத் தூண் முதல் கோரிப்பாளையம் பேருந்து நிறுத்தம் வரை இந்த மனிதச் சங்கிலி அமைக்கப்பட்டிருந்தது. மனிதச் சங்கிலி விழிப்புணர்வு இயக்கத்தை கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் தொடக்கி வைத்தார். கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் சே.பாலகிருஷ்ணன், பசுமை சங்க செயலர் ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



உலக வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மதுரையில் வெள்ளிக்கிழமை மனிதச் சங்கிலி அமைத்திருந்த அமெரிக்கன் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவியர்.

மதுரை தியாகராஜர் கல்லூரி சார்பில் நடைபெற்ற நிகழ்வில் மாணவ, மாணவியர் சைக்கிள் பேரணி மூலமாக உலக வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

திருமங்கலம் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் பேரணி நடைபெற்றது. கப்பலூர் சுங்கச் சாவடி, மறவன்குளம் வரை பேரணி சென்றது. கல்லூரி முதல்வர் ம.புவனேஸ்வரன், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் து.சங்கையா, தமிழ்த் துறை பொறுப்பாசிரியர் கரு.முருகேசன் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தினர் பங்கேற்றனர்.

தினமணி Sat, 21 September 2019
https://epaper.dinamani.com/c/43835182

# காற்று மாசுபாட்டால் குறையும் இந்தியர்களின் ஆயுள்

## ● உலக வெப்பமயமாதல் கருத்தரங்கில் தகவல்

■ மதுரை

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நாட்டுநலப்பணி திட்டம், பசுமை சங்கம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் உலக வெப்பமயமாதல் மற்றும் பருவகால மாறுபாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.

நாட்டுநலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பால கிருஷ்ணன் வரவேற்றார். 700 மாணவ, மாணவிகள் பங்கேற்ற மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் தொடங்கி வைத்தார். பருவ கால மாறுபாடு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய மாணவர்கள், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதைத் தொடர்ந்து உலக வெப்பமயமாதல் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. பசுமை சங்க செயலாளர் பேராசிரியர் ராஜேஷ் பேசுகையில், "2018-ம் ஆண்டில் இந்திய நிலப்பரப்பில் இருந்து 2.6 பில்லியன் டன் கார்பன் வளிமண்டலத்தில் கலந்துள்ளது. கார்பன்டை ஆக்ஸைடு அதிகம் வெளியேற்றும் நாடுகளில் இந்தியா 4-வது இடத்தைப் பிடித்துள்ளது. இதை கட்டுப்படுத்தினால் மட்டுமே பருவநிலை மாற்றம் கட்டுக்குள் இருக்கும். காற்று மாசுபாடு காரணமாக இந்திய குடிமக்களின் ஆயுள் காலம் 1.7 ஆண்டுகள் குறைந்துள்ளது என்று கூறினார்.

▼ **கார்பன்டை ஆக்ஸைடு அதிகம் வெளியேற்றும் நாடுகளில் இந்தியா 4-வது இடத்தைப் பிடித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த வேண்டும்.**



மதுரை மாநகராட்சி சார்பில் தூய்மையே சேவை இயக்க திட்டத்தின் கீழ் அமெரிக்கன் கல்லூரி மாணவியரின் பாலிதீன் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது.

தினகரன் மாவட்டம்

# மாணவிகளின் மனித சங்கிலி...




ஓசோன் தினத்தை முன்னிட்டு, மதுரை தமுக்கம் அருகே அமெரிக்கன் கல்லூரி சார்பில் நடந்த விழிப்புணர்வு மனித சங்கிலியில் ஏராளமான மாணவிகள் பங்கேற்றனர்.

# 'Seized plastic to be sent to Highways department'

## At least one road in each zone to be laid with shredded plastic: Visakan

STAFF REPORTER
MADURAI

Banned single-use plastic products, seized by Madurai Corporation, would be sent to State Highways department for laying roads, said Collector T.S. Rajasekar here on Tuesday.

### Human chain

He was speaking during the inauguration of a human chain formed by around 1,000 students of The American College in Tallakulam to create an awareness against the use of banned plastic products. The plastic items seized till October 2 would be collected and in about two weeks, they would be sent to the State Highways department, which could use it for laying roads, said the Collector.



**For a cause:** Students of The American College forming a human chain to create awareness against the use of single-use plastic products in Madurai on Tuesday. • S. JAMES

"Using shredded plastic to bind the bitumen would mean cutting costs and it will also ensure that the single use plastic items are put to proper use," he said. He said that through the awareness programmes conducted by the Corporation as part of 'Swachh Hi Seva' campaign, plastic usage would be reduced.

Speaking to *The Hindu*, Corporation Commissioner S. Visakan said that at least one road in each zone would be laid using shredded plastic products.

"A proposal is being prepared in this regard and the work is expected to commence in the first week of October," said Mr. Visakan.

He said that currently the shredded plastic bottles collected by the Corporation were being sold to private cement companies for reuse.

### 21 tonnes

The Corporation had seized around 21 tonnes of banned plastic products and imposed a total fine of ₹25 lakh till date this year.

# CLIMATE CHANGE AWARENESS



Students form a shape of 'O3 Ozone' at an awareness program organised on 'Global Warming and Climate Change' by NSS and Green Club of American College, in Madurai, on Friday.

*—Kasi Manikandan*



அமெரிக்கன் கல்லூரியில் முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் தலைமையில் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் சத்திரபட்டி அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் வளைய சூரியகிரகணத்தை கண்டுகளித்தனர்.

### மதுரையில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில்

# சூரிய கிரகணம் பார்த்த பொதுமக்கள்

**மதுரை**

மதுரையில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் மாணவர்கள், பொது மக்கள் சூரிய கிரகணத்தைப் பார்த்தனர்.

சூரியனை சந்திரன் தனது நிழலால் பூமி மீது விழாமல் மறைக்கப்படும் நிகழ்வு சூரிய கிரகணம் எனப்படுகிறது. வானியல் அதிசயமான சூரிய கிரகணம் நேற்று நிகழ்ந்தது. இதைப் பார்க்க, மதுரை அமெரிக்கன் கல்லூரி சார்பில் சத்திரப்பட்டி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் ஏற்பாட்டில் வடிகட்டி கண்ணாடிகள் கொண்டு வரப்பட்டன. இதைப் பயன்படுத்தி பேராசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என நூறுக்கும் மேற்பட்டோர் சூரிய கிரகணத்தைப் பார்த்தனர். காலை 9.31 முதல் 9.33 மணி வரை சுமார் 2.15 நிமிடங்கள் காண முடிந்தது எனப் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் திருமங்கலம், திருநகர், வண்டியூர் பூங்கா, அக்ரிணி குடியிருப்பு வளாகம் உட்பட 20-க்கும் மேற்பட்ட இடங்களில் சூரிய கிரகணம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அனைத்து இடங்களிலும் பொதுமக்கள், இளைஞர்கள், மாணவர்கள் சூரிய கிரகணத்தை பிரத்யேகக் கண் ணாடிகளை அணிந்து பார்த்தனர்.

மேலூரில் 3 நிமிடமும், சத்திரபட்டியில் 2.15 நிமிடமும் பிற இடங்களில் 20 முதல் 30 வினாடி மட்டுமே கிரகணம் தெரிந்தது என அறிவியல் இயக்கத்தினர் தெரிவித்தனர். சூரிய கிரகண நிகழ்வைப் பார்க்க தமிழ்நாடு அறிவியல் இயக்க நிர்வாகிகள் தினகரன், மலர்செல்வி, சிவ ராமன், முத்துகிருஷ்ணன், ராஜமாணிக்கம், நாராயணன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

கிரகண நேரத்தில் சாப்பிடக் கூடாது என்ற நம்பிக்கையை மாற்றும் வகையில் சத்திரப்பட்டியில் சூரிய கிரகணம் பார்த்தவர்களுக்கு பணியாரம் உள்ளிட்டவை வழங்கப் பட்டது.

# இயற்கை வழியில் இறைப்பணி




மரங்களை அகற்றி விட்டு பெரிய கட்டடங்களை கட்டுவதை பார்த்திருக்கிறோம். சாலையோர மரங்களை வெட்டி அகற்றி விட்டு ரோடு விரிவாக்கம் செய்வது நெடுஞ்சாலைத்துறையின் வழக்கமான பாணி.

''வேறு வழியே இன்றி மரம் ஒன்றை அகற்ற நேரிட்டால், 12 மரக்கன்றுகளை நடவு செய்து வளர்க்க வேண்டும்,'' என்பது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு. இதை மாநில, தேசிய நெடுஞ்சாலை ஆணையங்கள் பின்பற்றியதாக தெரியவில்லை. மரங்களை வெட்டுவதும், வேரோடு வெட்டிச் சாய்ப்பதும் மரம் வெட்டிகளுக்கு கைவந்த கலையாக உள்ளது.

இயற்கை வளங்களை படுவேகமாக அழித்து வருவதால் மனித வாழ்க்கை அர்த்தமற்றதாகி வருகிறது.ஆனால் இயற்கை வழியில், ஓசையின்றி இறைப்பணியில் ஈடுபட்டு வருகிறது மதுரை அமெரிக்கன் கல்லூரி. அடர்ந்த வனம் என்று கூட சொல்லும் அளவிற்கு, மரங்களுக்கு நடுவே கல்லூரி அமைந்திருப்பது இக்கல்லூரிக்கே உரிய சிறப்பு. இங்கு மரங்களையும் மாணவர்களாகவே போற்றி பாதுகாத்து வருகின்றனர்.

கல்லூரியின் பிரதான நுழைவு வாயிலில் வலது புறம் உருவாக்கப்பட்டுள்ள 'தாவரவியல் பூங்கா'வில் இருந்து வெளியேறும் மூலிகை வாசனை, காற்றில் கலந்து கல்லூரிக்கு வருபவர்களை மனமுவந்து வரவேற்கிறது.

தாவரவியல் பூங்காவில் ஆக்ஸிஜனை அதிகம் வெளியேற்றும் மூலிகைகள், மரங்கள் வளர்க்கப்படுகின்றன. மரங்கள், செடிகளின் தாவரவியல் பெயர், தாவர குடும்பம் பற்றிய விபரங்கள் உள்ளன.

இது கல்வி ரீதியிலும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக உள்ளது.

# Tourists throng Keeladi ahead of the site's closure

## Overcrowding is hampering documentation: officials

STAFF REPORTER
MADURAI

As the Keeladi archaeological site continues to grab global attention, there has been an enormous surge in the number of locals visiting the site.

Every day, between 2,500 to 7,000 tourists, students and locals who wish to take a peek at their heritage and assert their Tamil pride land up at the site, say officials from the Tourism department.

District Tourism Officer P. Balamurugan says that there has been a steady stream of locals and Indian tourists asking the department about the best ways to reach Keeladi at tourism information centres located in the airport and the railway station.

Keeladi has become a site of selfies and a market for small-scale vendors selling knick-knacks and snacks. A senior official from the tourism department in charge c Sivaganga and Ramanath uram says that the cr s had helped boost the cal economy.

"Although many t ists are not staying here (Si ganga), they are stopping for breakfast and lunch. T also end up buying so jewellery and clothes om here," he says.

With the site likely be closed in the next two w s, people want to take a lo at the site and artefacts. student community, particularly from schools and colleges have been regularly visiting the place.



Students and locals at the archae site at Keeladi in Siva district. • FILE PHOTO

M. Rajesh, a professor from The American College who recently visited the site, said, "We have read about the Indus Valley civilisation in our books. We have seen famous pots, figurines and vessels from there but the sites are far from here. History is learnt best by experiencing it. Keeladi is that experience," he says.

rding to Travel Club Mad i president, Chitra Ganap y, Keeladi answers the qu ion "After temple hoppin what next?" for tourists o visit Madurai. "The sit s currently being studied d does not have enough international tourists yet. wever, several locals, w are deeply intrigued the need to learn about r roots and heritage ar eading there. Such place elp locals understan e antiquity of their culture. Everyone is looking to identify with their roots and have their curiosity kindled," she says.

The sizeable inflow, however, causes a predicament for officials from the Archaeology department. The officials who are wrapping up the fifth phase by completing the documentation procedure, say that they are not being allowed to do their job.

"There is manpower shortage to handle such massive crowds. We have four archaeologists and 10 research scholars manning 52 digs. Of the pits, 30 are off limits and are important. Each research scholar supervises four pits. Several instances of people stealing broken clay items from digs have been reported but they are not any significant items," said an official from the Tamil Nadu Archaeology Department.

He adds that hundreds of people ask the officials about the site's history and pester them. "When we do not answer, they throw a fit. This is why we have put up a board containing basic information in Tamil and English," he says.

As on October 3, officials from the Police department have been asked to deploy their personnel at the site and allow tourists in batches of only 100 between 10 a.m. and 3 p.m.

"This is only in writing. Today [Saturday] we saw 2,500 people at least and no specific regulations were in place," says the official.

Although an officer from the Tourism department in Sivaganga said that he planned to fence the site and ensure ticketing at the site, the Archaeology department is unwilling to consider the proposal yet.

Madurai MP Su. Venkatesan says that the bare minimum that the government can do is to ensure 24x7 police protection. He adds that it is important for all people to view the site and learn about their local history. "To strike a balance, some of us as history enthusiasts and members of the Rotary club have asked 50 students to man each pit and help with crowd control," he says. The surging crowds demand a state-of-the-art virtual museum instead of the originally planned site museum, he adds.

# Science exhibition inaugurated

The president of the Tamil Nadu science forum, M Rajesh, an assistant professor with the American College, inaugurated the science exhibition at Nehru Vidhayasalai higher secondary school recently. He said that science had a vital role to play in a developing country like India. Highlighting the importance of such events, he said that science exhibitions in schools develop the scientific temper in students. Vice-president of the school, Kalavalli Saradha, administrator Ezhilmathi Seth among others spoke at the event.

CAMPUS Notes



DIGEST

## ...an robbed ...d jewellery

# 231 birds, 26 species documented in American College bird count

Times News Network

**Madurai:** A total of 231 birds and 26 species were documented during three-day Greater Backyard Bird Count (GBBC) exercise carried out in American College from Monday to Wednesday.

The findings included some rare species like Barn Owl, **Shikra** and Paradise flycatcher. Among the popular birds that were recorded were the Rufous treepie, spotted owlet, coppersmith barbet, coucal, roller, black winged kite, flame backed woodpecker, golden flame backed woodpecker, red vented bulbul, palm swift, yellow billed babbler in addition to regular birds like myna, crow, rock pigeons and rose ringed parakeets.

According to college authorities, the GBBC is a joint project for the Cornell Lab of Ornithology and Audubon, with Canadian partner Bird Studies. It is also a global initiative that allows anyone, anywhere in the world with internet access to participate. The Green Club of the college coordinated the bird counting exercise that concluded on Wednesday.

More than 50 students from the microbiology and zoology departments participated in this programme and documented the count and species of birds they spotted in the college campus in the last three days. M Rajesh, assistant professor of zoology and secretary of Green Club said they spotted 18 bird species during last year's bird count, but recorded more number this year. The prized moment during the exercise was capturing the picture of an albino mongoose (a white mongoose) that has been roaming around the campus for long. For most of students the exercise was an exciting affair and they expressed that they could learn about birds and their lifestyle.



## BIRD FINDERS

- Popular bird species like **rufous treepie, spotted owlet,** coppersmith barbet, coucal and roller were documented in the Greater Backyard Bird Count exercise in American College
- Rare species like **barn owl, paradise flycatcher and shikra** were also recorded
- Students also managed to **photograph a white mongoose** (albino) that was found roaming on the campus



## Survey in Sourashtra College records 200

Madurai: In another birdcount undertaken at the Sourashtra College in Pasumalai on the city outskirts for the first time on Wednesday, students recorded nearly 200 more birds from 34 species. With proximity to the countryside and hillock, more bird species were spotted in the college. More than 35 students of biochemistry and microbiology participated in the programme.

Students said that it was first of the kind exercise in Sourashtra College. They were not aware of many birds residing in their campus and assumed that only crow, myna, koel and parrot species are there. The exercise revealed that birds like common hawk cuckoo, jungle, rufous treepie, shikra, coucal, roller, flame backed woodpecker, ibis, francolin and peacock are also there in the campus.



# HOMES FOR THE FEATHERED

M Rajesh with a sparrow home made from cardboard

- **This assistant professor of zoology at the American College, builds homes for sparrows**
- **He urges people to do the same, citing that they are dependent on us for survival**

**Kaushik Kannan**

While it was once common to spot house sparrows at every nook and corner in the city, it has become rare now...so much so that most of the school-going children these days are not at all aware of the existence of this species.

M Rajesh, assistant professor, Department of Zoology at the American College, is on a mission — he wants to increase the population of sparrows in the city. In the bid to do so, he distributes free artificial nests to the residents in areas where house sparrows are spotted frequently, and even goes so far as to encourage school and college students to do the same.

"Most of the people think that the decline in the number of house sparrows is due to the radiation from mobile phone towers, but it is not only that.. the boom in the number of human settlements over the years has displaced the natural habitat of these sparrows," says Rajesh.

Rajesh cites yet another important reason for the dwindling population of these birds — pesticides. "Adult sparrows catch insects and worms from agricultural lands and feed them to the young birds, which in turn benefited farmers because it was natural pest-control. But when farmers started using chemical pesticides in their agricultural lands, the young sparrows feeding on the insects and worms started becoming calcium deficient. This ultimately affected the species as the eggs would break before the hatching process," he explains.

Rajesh points out that house sparrows are heavily dependent on human beings as these species would not nest in trees but hidden places such as thatched roofs, electric boxes in order to protect themselves from predators. "Due to the increase in the number of concrete houses, the habitats of the houses sparrows were affected. I wanted to help bring these lovely birds back," he adds.

He has been organising regular meetings to raise awareness on this issue since 2012. "After organising a meeting, I distribute free artificial nests to the participants and ask them to keep these nests in a safe place — such as sun shades or balconies. After these artificial nests are placed inside the houses, the house sparrow population has increased in areas like Koodal Nagar, Sangeeth Nagar, Thabal Thanthi Nagar, Sellur, according to a survey which was taken last year," says Rajesh. He aims to make the younger generation more sensitive to the cause of sparrows. "Many students have made nests from cardboard boxes after attending my awareness sessions. I really hope more adults show the same enthusiasm in the future," he smiles.

**DID YOU KNOW?**

- Sparrows never walk, they always jump.
- They are monogamous.
- They are not migratory birds.
- They feed only insects to their chicks.
- Sparrows never build their homes on trees.

*Source: http:// www.sparrowshelter.org.in*

# Campaign against plastic marks World Environment Day

STAFF REPORTER
MADURAI

The World Environment Day, observed this year on Tuesday with the theme of 'Beat plastic pollution,' was marked with campaigns by several institutions against use of plastics in day-to-day life. The American College organised a novel initiative of distributing saplings in exchange for plastics at the entrance of the college throughout the day.

S. Aneesh Sekhar, Commissioner, Madurai Corporation, who inaugurated the campaign at the college, spoke on how the prevalence of plastics have become a key environmental issue and the importance of waste segregation at every households that will enable efficient recycling of plastics.

M. Davamani Christober, Principal, said that the idea of the campaign was to create awareness against the use of plastics and inculcate a sense of responsibility among the public to recycle plastics. Stating that it will not be just a one-day event, the Principal said that the college will try to continue this initiative on a regular basis.



Corporation Commissioner S. Aneesh Sekhar distributing saplings to participants at the World Environmental Day celebration at The American College in Madurai on Tuesday. ▪S. JAMES

M. Rajesh, secretary, Green Club of the college, said that around 100 saplings of various tree varieties were distributed to the public throughout the day and five kilograms of plastics was collected in return. "We sent the plastic for recycling through Madurai Corporation," he added.

A cycle rally organised by Mahatma Schools and Soroptimist International (Madurai), to create awareness against use of plastics, was flagged of from Gandhi Museum by Madurai Collector K. Veera Raghava Rao in the presence of Premalatha Panneerselvam, Secretary and Correspondent of Mahatma Schools. Tens of children from the school and volunteers took part in the rally.

Al-Ameen Higher Secondary School organised a tree planting drive, presided over by its Correspondent Mohammed Idris, on the school campus on Monday with around 100 saplings provided by Forest Department.

HERN RAILWAY

SOUTHERN RAILWAY

EXPRESS READ

## DFO appeals students to conserve nature

Madurai: District Forest Officer J R Samartha has appealed the students to conserve the nature. During his inaugural address of the national conference on 'Western Ghats: Threats and Conservation' at The American College that was organised by the Post Graduate and Research Department of Zoology here on Wednesday, Samartha said that most of the natural distaers were caused by human action. He appealed the students to save nature and told them to pass the message to their parents and friends. "Nature is a common resource pool. We have to conserve it," he pointed out and added that everything should start from home. ENS

THE NEW INDIAN EXPRESS Thu, 18 October 2018
epaper.newindianexpress.com/c/332158:

# ‘பிளாஸ்டிக்’ கொடுங்க; ‘பிளான்ட்’ஐ பிடிங்க

## சூழல் விழிப்புணர்வில் வித்தியாசம்

மதுரை, ஜூன் 6 –

மதுரையில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மக்களிடம் பிளாஸ்டிக் பொருட்களை பெற்றுக்கொண்டு, அதற்கு பதில் மரக்கன்றுகள் வழங்கும் வித்தியாச நிகழ்ச்சி நடந்தது.

மதுரை அமெரிக்கன் கல்லூரி மற்றும் பசுமை சங்கம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினவிழா கல்லூரியில் கொண்டாடப்பட்டது. முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் வரவேற்றார். மாநகராட்சி கமிஷனர் அனீஷ் சேகர் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்டோர் பழைய பிளாஸ்டிக் பைகள், பொருட்களை பசுமை சங்க நிர்வாகிகளிடம் வழங்கி மரக்கன்றுகள் பெற்றனர். அவர்களிடம் துணி பைகள் பயன்படுத்த வலியுறுத்தப்பட்டது.

உதவி வன அலுவலர் இளங்கோ, மதுரை கிரீன் நிர்வாகி சிதம்பரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு கழகம் தலைவர் நோவா ராஜா, பசுமை இயக்கம் தலைவர் இவாஞ்சலின் மனோகரன், செயலாளர் ராஜேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

# செப்டம்பர்...செப்டம்பர்... இது

**மதுரை, செப். 21–**

'பட்டாம்பூச்சி' என்றாலே எல்லோர் மனதிலும் வானில் சிறகடித்து பறக்கும் உணர்வு ஏற்படும். பல வண்ணச் சிறகுகளை விரித்து அவை வட்டமடிக்கும் அழகை ஒரு நொடி பார்த்தால் கூட நீங்காத மனப்பாரம் பறந்தோடி விடும். இயற்கை அன்னை வார்த்தெடுத்த அந்த பறக்கும் ஓவியத்திற்கும், மனிதர்களுக்கும் இடையே அந்த அளவிற்கு ஒரு மெல்லிய உள்ளுணர்வு ஒட்டி உறவாடுகிறது.

தேனீக்களுக்கு அடுத்து பூக்களில் நடக்கும் மகரந்த சேர்க்கைக்கு முக்கிய காரணமான இருக்கும் இந்த பட்டாம்பூச்சிகளை உலக அளவில் கொண்டாடாத நாடுகளே இல்லை. சில நாடுகளில் மனஅமைதியின்றி தவிப்போருக்கு பட்டாம்பூச்சிகளின் அழகை ரசிக்க வைக்கும் மருத்துவ முறையும் பின்பற்றப்படுகிறது. அவற்றை கவுரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் உலக அளவில் செப்டம்பரை 'பட்டாம்பூச்சி மாதம்' ஆக கொண்டாடுகின்றனர்.



ராஜேஷ்

இந்தாண்டு இந்தியாவிலும் இக்கொண்டாட்டம் குறித்து அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தேசிய உயிரியல் மையம் மற்றும் நேச்சுரல் ஹிஸ்டரி அமைப்புடன் 50 தன்னார்வ இயக்கங்கள், பட்டாம்பூச்சி ஆராய்ச்சியாளர்கள், சூழல் ஆர்வலர்களும் இக்கொண்டாட்டத்தில் இணைந்துள்ளனர்.

இதன் முக்கிய நோக்கம், உலகளவில் உயிர் வாழும் பட்டாம்பூச்சி வகைகளை ஆவணப்படுத்த வேண்டும் என்பது தான். இதன் ஒரு பகுதியாக செப்.,14 முதல் பட்டாம் பூச்சிகளை கணக்கெடுக்கும் பணிகள் நடக்கின்றன.

இவற்றின் விவரங்கள் நாடு முழுவதும் 'பட்டர்பிளைஸ் இந்தியா', 'ஐநேச்சரலிஸ்ட்' மற்றும் 'இந்திய பல்லுயிர் போர்டல்' போன்ற இணைய தளங்களில் பதிவிடப்பட்டு வருகின்றன.

**மதுரையில் 100 இடங்கள்**

மதுரையில் அமெரிக்கன் கல்லூரி கிரீன் கிளப் இதற்கு பொறுப்பேற்று பல்வேறு கல்லூரி மாணவர்கள் சார்பில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் பட்டாம்பூச்சிகளை கணக்கிடும் பணி நடக்கிறது. இதன் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ராஜேஷ் கூறியதாவது:

உலகளவில் 28,000 வகை பட்டாம்பூச்சிகள் உள்ளன. தற்போது வரை 17,500 வகைகள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் அழகிகள், வெள்ளையன்கள், மஞ்சள் வெள்ளை நுனிச்சிறகிகள், வரியன்கள், தூரிகைநார் செதில் காலிகள், நீலன்கள், தாவிகள், துள்ளித்தாவும் வகைகள் என இதுவரை 319 வகை இனங்கள் பதிவாகியுள்ளன.

மேற்கு தொடர்ச்சியில் இருந்து கிழக்கு தொடர்ச்சி மலை பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ள இவை, செப்., இறுதி முதல் அக்., துவக்கத்தில் மீண்டும் மேற்கு நோக்கி இடம் பெயரும். இவ்வினங்கள் கணக்கெடுக்கும் பணியும், பட்டாம்பூச்சி தொடர்பான இணையவழி கருத்தரங்கு, வினாடி வினா உள்ளிட்ட விழிப்புணர்வு போட்டிகளும் நடக்கின்றன என்றார்.



ஸ்மால் சால்மன் அராய்



பிளைன் டைகர்



லெமன் பேன்சி

# அமெரிக்கன் கல்லூரியில் வெள்ளை கீரிப்பிள்ளை

**மதுரை, பிப். 24 –**

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடந்த பறவைகள் கணக்கெடுப்பில் வெள்ளை நிற கீரிப்பிள்ளை இருப்பது கண்டறியப்பட்டது.

மாணவர்களுக்கு இயற்கை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கல்லூரியின் பசுமை சங்கம் சார்பில் பறவை பார்த்தல் நிகழ்வு நடந்தது.

இதில் அரசவால், ஈபி டிப்பான், காகம், கிளி, கருப்பு பருந்து, புறா, குயில், கரிச்சான் குருவி, செம்போத்து, புள்ளி ஆந்தை, வல்லூறு, பனங்காடை, கூகை உட்பட 26 இனங்கள் கண்டறியப்பட்டதாக சங்கத் தலைவர் காருண்யாள், செயலாளர் ராஜேஷ் தெரிவித்தனர்.



அமெரிக்கன் கல்லூரியில் வெள்ளை நிற கீரி.

அவர்கள் கூறியதாவது: கடந்த ஆண்டை விட தற்போது 8 பறவையினங்கள் அதிகரித்து உள்ளன. மொத்தம் 200 பறவைகள் வசிக்கின்றன. கீரிகள் வழக்கமாக பழுப்பு நிறத்தில் காணப்படும்.

கல்லூரி வளாக குடியிருப்பு பகுதியில் வெள்ளைநிற கீரிப் பிள்ளை ஓடியதை பார்த்தோம். மனிதர்களிடம் நிறமாற்றம் ஏற்படுவதை போல கீரியில் மரபணு மாற்றத்தால் (அல்பினோ) நிறமாற்றம் வந்திருக்கலாம். இவற்றின் எண்ணிக்கையும் குறைவாக தான் இருக்கும்.

ராஜஸ்தானில் 1993ல் இதை பார்த்ததாக 'பாம்பே இயற்கை வரலாற்று சொசைட்டி' ஆய்வு தெரிவிக்கிறது. அதன்பின் 'அல்பினோ' கீரியைப் பற்றிய தகவல் எங்கும் இல்லை.

கல்லூரியில் இதற்கு முன்பே பலமுறை பார்த்திருந்தாலும், அவற்றை போட்டோவாக பதிவு செய்ய முடியவில்லை. இவை மிகவேகமாக ஓடும். சிறிய எலி, கோழிக்குஞ்சு, பாம்பு, பறவை களை உணவாக கொள்கிறது, என்றனர்.

# கண்மாய் பகுதியில் விதைப்பந்து விதைப்பு

மதுரை, டிச.7–

மதுரை அமெரிக்கன் கல்லூரி சார்பில் பசுமை சங்கம் மற்றும் வைகை சூழலியல் பேராசிரியர்கள், மாணவர்கள் இணைந்து உலக மண் தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவர்கள் செம்மண், கரிசல் மண் மற்றும் சாணத்துடன் ஆலமரம், வேம்பு மற்றும் புளிய விதைகளை கலந்து விதைப்பந்துகளை தயார் செய்தனர். பின்னர் இந்த விதைப்பந்துகளை கடச்சனேந்தல் கண்மாய் மற்றும் சுற்றுப்புறங்களில் விதைத்தனர். விதைப் பந்துகளை விதைக்கும் நிகழ்வை கல்லூரி முதல்வர் தவமணி தொடங்கி வைத்தார். மேலும் அவர் பேசும் போது, இந்த விதைப் பந்து என்பது குழி தோண்டுதல், உழவு போன்றவை தேவையில்லாமல் தாவரங்களை நடுவதற்கு எளிய வழிமுறை ஆகும். இவை விரைவில் முளைத்து புதிய தாவரங்களுக்கு உயிர் கொடுக்கும் என்றார். நிகழ்ச்சியை பசுமை சங்க பேராசிரியர் ராஜேஷ் ஒருங்கிணைத்தார். பாரதி ஷீலா, டூன் ஜஸ்டின் மனோகர் உள்பட மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

# THE AMERICAN COLLEGE, MADURAI

*Re-accredited (2nd Cycle) by NAAC with Grade "A" CGPA – 3.46 on a 4-point scale)*
*An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University*

Since 1881

## Green Club & SLP Vaigai Ecology

Cordially Invite you to commemorate

## World Soil Day

On 05.12.2020 at 12 pm

**Dr.M.Davamani Christober**
Principal & Secretary

**Inaugurates**

Throwing Seed Balls into the banks of
Kadachenendal Kanmoi



5 DECEMBER 2020

World Soil Day

Keep soil alive,
protect soil biodiversity

# அமெரிக்கன் கல்லூரியில் மண் தின விழா

**மதுரை**

அமெரிக்கன் கல்லூரியின் பசுமைச் சங்கம் சார்பில் வைகை சூழலியல் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உலக மண் தினத்தைக் கொண்டாடினர்.

இதையொட்டி மாணவர்கள் விதைப்பந்துகளைத் தயாரித்தனர். அமெரிக்கன் கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் காய்ந்த விதைப் பந்துகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கொடுத்து கடச்சனேந்தல் கண்மாயில் விதைக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அவர் பேசும்போது, இந்த விதைப் பந்துகள் தாவரங்களை வளர்ப்பதற்கான எளிதான மற்றும் நிலையான வழியாகும். மிகக் குறைந்த செலவில், உழுதல் அல்லது மண்ணில் துளையிடுதல் போன்ற செயல்பாடுகள் இன்றி மரக் கன்றுகளை வளர்க்க முடியும். இதன்மூலம் சுற்றுச் சூழல் பசுமையாகும் என்றார்.

இந்நிகழ்வை பசுமைச் சங்கத் தலைவர் ராஜேஷ் ஒருங் கிணைத்தார். பேராசிரியர்கள், மாணவர்கள். முனைவர் டாரதீ ஷீலா, டீன் ஜஸ்டின் மனோகர் ஆகியோர் பங்கேற்றனர்.



▲ சிட்டுக்குருவி உருவப் படம் கொண்ட முகமூடி அணிந்து மனிதச் சங்கிலியில் பங்கேற்ற அமெரிக்கன் கல்லூரி மாணவிகள். படம்: ஜி. மூர்த்தி

# சிட்டுக்குருவிகள் தின கொண்டாட்டங்கள்

## ● முகமூடி அணிந்து மாணவர்கள் விழிப்புணர்வு

■ மதுரை

மதுரை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகள், தன்னார்வ அமைப்புகள் சிட்டுக்குருவிகள் தினத்தை நேற்று கொண்டாடினர். அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள், சிட்டுக்குருவிகள் போன்ற முகமூடி அணிந்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பசுமைச் சங்கம் சார்பில் உலக சிட்டுக்குருவி தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

பசுமைச் சங்க மாணவர்கள் சிட்டுக்குருவி முகமூடி அணிந்து கல்லூரி முன்பு மனிதச் சங்கிலி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மனிதச் சங்கிலியை கல்லூரி முதல்வர் ம.தவமணி கிறிஸ்டோபர் தொடங்கி வைத்து பேசியது: சுறுசுறுப்பாக ஓடியாடும் குழந்தைகளை சிட்டுக் குருவிகளின் சுறுசுறுப்புடன் ஒப்பிட்டே சொல்வார்கள். சிட்டுக்குருவிகள் கூடு இல்லாத வீடே இல்லை என்று சொல்லும் அளவு சிட்டுக்குருவிகள் இருந்தன. கிராமங்கள், நகரங்கள் என அதிக அளவு எண்ணிக்கையில் இருந்த இப்பறவையானது தற்போது மக்களுடைய வாழ்க்கைமுறை மாற்றத்தால் குறைவாகிவிட்டது. இதை அதிக எண்ணிக்கையில் வரவைக்கும் முயற்சியாக எங்களுடைய பசுமைச் சங்கம் அட்டைப் பெட்டியில் கூடு மற்றும் ஆலோசனையும் வழங்கி வருகிறது என்றார்.

இதில் கல்லூரியின் நிதியாளர் பேராசிரியர் ஹெலன் ரத்ன மோனிகா மாணவ, மாணவிகளுக்கு முகமூடி வழங்கினார். மாணவர்கள் சிட்டுக் குருவிகளை பாதுகாக்க பதாகைகளை ஏந்தி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

முன்னதாக, பசுமை சங்கத் தலைவர் பேராசிரியர் ஜெ.இ. வாஞ்சலின் பிரபாகரன் வரவேற்றார். பசுமைச் சங்கச் செயலாளர் எம். ராஜேஷ், பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் பறவைகளுக்கு தண்ணீர் வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பறவைகளை பாதுகாக்க முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியில் இருந்து 600 சிட்டுக்குருவி முகமூடிகள் கேப்ரன்ஹால் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆனையூர், சிட்டம்பட்டியில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு விழிப்புணர்வுக்காக வழங்கப்பட்டது.

### இரண்டாம் வாழ்க்கையை தொடங்கிய சிட்டுக்குருவிகள்

திருமங்கலத்தைச் சேர்ந்த பறவையியல் ஆர்வலர் ரவீந்திரன் நடராஜன் கூறியது:

கடந்த நூற்றாண்டின் இறுதியில் சிட்டுக்குருவிகள் எண்ணிக்கை 80 சதவீத நகரங்களில் கணிசமாக குறைந்தது. காரணம் அலைக்கற்றைகளின் கதிர்வீச்சே என்று வாதிட்டனர். ஆனால், சூழல் அறிஞர்கள் மாறிவரும் நகரத்தின் கலாச்சாரமே என அறிவுறுத்தினர். இந்தியாவில் மொத்தம் 5 வகை சிட்டுக்குருவிகள் உள்ளன. அதில் முதல் வகை அடைக்கலாங் குருவி என்று அழைக்கப்படும் நமது சாதாரண சிட்டுக்குருவி. இதை ஆங்கிலத்தில் house sparrow என்று அழைப்பார்கள். இது இந்தியா முழுவதும் பரவி உள்ளது.

இரண்டாம் வகை சிந்து சிட்டு என்னும் குருவி. இது பாகிஸ்தானை பிறப்பிடமாகக் கொண்டது. பஞ்சாப் வரை பரவி உள்ளது. மூன்றாம் வகை ஸ்பானிஸ் சிட்டு. இது இந்திய, நேபாள பகுதிகளில் வலசை வருவது. நான்காம் வகை ரூசட் சிட்டு. இது இமயத்தின் தென்கிழக்கு பகுதிகளை தாயகமாக கொண்டது. ஐந்தாம் இனம் மரக்குருவிகள் என்று அழைக்கப்படும் வகையாகும்.

பொதுவாக சிட்டுக் குருவிகள் அனைத்துமே நமது விவசாய நிலங்களை சார்ந்தே வாழ்ந்து வருகின்றன. சமீபத்திய விழிப்புணர்வால் சிட்டு குருவிகள் தங்களின் இரண்டாம் வாழ்க்கையை உலகில் வாழத் தொடங்கி உள்ளன என்றார்.

# Joining hands to save sparrows

## Human chain to mark World Sparrow Day

**STAFF REPORTER**
MADURAI

As part of World Sparrow Day, observed on March 20 every year to raise awareness of house sparrows and threats to their population due to rapid urbanisation, hundreds of students of The American College took part in a human chain formation here on Monday.

The students wore masks carrying images of house sparrows, held placards and raised slogans, stressing the importance of protecting the habitats of house sparrows.



Students and faculty of The American College participating in a human chain formation in Madurai on World Sparrow Day on Monday. ▪ PHOTO: G. MOORTHY

Inaugurating the human chain, M. Davamani Christober, Principal, appealed to the youngsters to have artificial nests in their houses for sparrows. He also highlighted the importance of keeping water in small bowls in houses for the sparrows and other birds in summer.

### Survey

M. Rajesh, secretary of Green Club at the college, said the population of house sparrows had been dwindling rapidly in urban areas. Citing a survey conducted in 22 areas in Madurai, he said only four had more than 100 sparrows while the remaining had only 20 to 30 sparrows.




உலக சிட்டுக்குருவி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவியர் முகமூடி அணிந்து மனித சங்கிலி பிரசாரத்தில் நேற்று ஈடுபட்டனர்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
www.dinakaran.com
/dinakarannews
/dinakaran_web

மாவட்டம்

21.3.

சிட்டுக்குருவி முகமூடியுடன்

# மாணவியர் விழிப்புணர்வு மனித சங்கிலி





உலக சிட்டுக்குருவி தினத்தை முன்னிட்டு, மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவியர் சிட்டுக்குருவி முகமூடியுடன் விழிப்புணர்வு மனித சங்கிலி நடத்தினர். அடுத்தபடம்: சோளிங்குருணி அரசுநடுநிலைப்பள்ளியில் சிட்டுக்குருவி முகமூடி அணிந்து விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவர்கள்.

மதுரை, மார்ச். 21: அமெரிக்கன் கல்லூரி பசுமைச் சங்கம் சார்பில், உலக சிட்டுக்குருவி தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில், சிட்டுக்குருவிகளை பாதுகாக்க வலியுறுத்தி, கல்லூரி பசுமைச் சங்க மாணவ, மாணவியர் சிட்டுக்குருவி முகமூடி அணிந்து கல்லூரி வாசலில் மனித சங்கலி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கைகளில், 'சிட்டுக்குருவிகளை பாதுகாக்க வேண்டும் என்ற பதாதைகளை வைத்திருந்தனர்.

இதில் தலைமை வகித்த கல்லூரி முதல்வர் தவமணி கிறிஸ்டோபர் பேசுகையில், " மக்களுடைய வாழ்க்கை முறை மாற்றத்தால் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது.

சிட்டுக்குருவிகளை பாதுகாக்கும் முயற்சியாக, கல்லூரி பசுமைச் சங்கம் சார்பில், அட்டைப்பெட்டியில் கூடு அமைத்து ஆலோசனையும் வழங்கப்படுகிறது" என்றார்.

விழாவில், பசுமைச் சங்க தலைவர் பேராசிரியர் இவாஞ்சலின் பிரபாகரன், செயலர் ராஜேஷ் ஆகியோர் பேசினர்.

மதுரை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு கல்லூரி சார்பில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட முகமூடிகள் வழங்கப்பட்டன. 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றம்: திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சோளிங்குருணி நடுநிலைப்பள்ளியில் உலகசிட்டுக்குருவிகள் தினத்தை முன்னிட்டு, பள்ளி மாணவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்குபெற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மாணவர்களை சிட்டுக்குருவி முகமுடி அணிந்து அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# Photo competition held to celebrate 'Wildlife Week'

TIMES NEWS NETWORK

**Madurai:** The 'Wildlife Week' celebrations at American College ended on Thursday with a colourful photo exhibition and competition.

The college had announced a photography competition to capture the flora and fauna on the campus during the week. Students were asked to upload the photos on Facebook. As many as 20 students participated in the competition and three of the best photographs were shortlisted and prizes were distributed to them on Thursday.

Besides, the Green Club of the college has been documenting the fauna inside the campus for a while. They have identified 74 species, of which 27 are bird species, 17 are butterflies and the rest are insects and reptiles. Using the photographs, an exhibition was organised on Thursday.

## BEST PHOTOS AWARDED

"The documentation process was quite encouraging. We have recently added a peacock family with five pea fowls in the campus," said M Rajesh, assistant professor of Zoology and secretary of Green Club. Interestingly, an albino mongoose was spotted in the campus and the green club has been desperately following it to document it, he said.

During the valedictory function of Wildlife Week celebrations, district forest officer Nihar Rajan urged students to inculcate develop environmental responsibility. The public should come forward to support the conservation efforts of the forest department.

Principal of the college M Davamani Christober told students to be friendly towards nature. President of Green Club J Karunyal welcomed the gathering. Around 150 students from various departments participated in the event.